




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 278 01.04.2026 WEDNESDAY PANGUNI: 18 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 278 01.04.2026 புதன்கிழமை பங்குனி : 18 விலை : ரூ.5/–


## தமிழ்நாட்டில்

# "68 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்வு!"

## இன்று நள்ளிரவு முதல் அமலானது

சென்னை, ஏப்.1-

தமிழ்நாட்டில் உள்ள 68 சுங்கச்சாவடிகளில் இன்று நள்ளிரவு முதல் (ஏப்ரல் 1ம் தேதி) முதல் சுங்கக் கட்டணம் அமலுக்கு வந்தது. தமிழகத்தில் உள்ள ஸ்ரீபெரும்புதூர், பரனூர், வானகரம், கிருஷ்ணகிரி, மதுரை, நான்குநேரி, வாணியம்பாடி, விராலிமலை, கப்பலூர், கனியூர், ஆத்தூர், தேனி உள்ளிட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் 1ம் தேதி முதல் கட்டணம் உயர்த்தப்பட்டது.

சுமார் ரூ.5 முதல் ரூ.100 வரை கட்டண உயர்வு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் பேருந்துகள், சுற்றுலாப் பேருந்துகள், சரக்கு வாகனங்கள் நீண்ட தூரம் பயணிக்கும் போது பல சுங்கச்சாவடிகளைக் கடக்க வேண்டியிருப்பதால், தினமும் இயக்கச் செலவில் சுங்கச் சாவடி கட்டணம் பெரிய சுமையாக மாறி உள்ளது.




இதனால் கிராமப்புற சாலைகளில் நெரிசல் அதிகரிப்பு, சாலை சேதம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது. சுமார் 3 முதல் 5 சதவிகிதம் வரை சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட உள்ளதால், கார்களுக்கான கட்டணம் ரூ.5 வரையும், கனரக வாகனங்களுக்கான கட்டணம் ரூ.40 வரையும் உயர வாய்ப்புள்ளது. இதனால் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கும் அபாயம் எழுந்துள்ளது.

சென்னைகன்னியாகுமரி, திருச்சிசேலம் மற்றும் சேலம் கோயம்புத்தூர் உள்ளிட்ட முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள 60 சுங்கச்சாவடிகள், 60 கி.மீ. நீளமுள்ள வண்டலூர்மிஞ்சூர் வெளிவட்டச் சாலையில் நான்கு, மதுரை வெளிவட்டச் சாலையில் இரண்டு, நாவலூர் உள்ளிட்ட மாநில நெடுஞ் சாலையில் அமைந்துள்ள 8 சுங்கச்சாவடிகளில் இந்த கட்டண உயர்வு இன்று நள்ளிரவு (ஏப்ரல் 1ம் தேதி) முதல் அமலுக்கு வந்தது.

தமிழ்நாடு தேசிய நெடுஞ் சாலைகளில் மீதமுள்ள 17 சுங்கச்சாவடிகளில் ஆண்டு அட்டவணைப்படி செப்டம்பர் 1ம் தேதி கட்டண உயர்வு மாற்றி அமைக்கப்படும். சுங்கச்சாவடி கட்டண உயர்வை மறுபரிசீலனை செய்து மக்கள் மற்றும் போக்குவரத்து துறைக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை உடனடியாக மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## "என்னைப் பொறுத்தவரை கரூரும், கோவையும் உடலும் உயிரும் போல" செந்தில் பாலாஜி

சென்னை: ஏப்.1-

"என்னைப் பொறுத்தவரை கரூரும், கோவையும் உடலும் உயிரும் போல" என முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "நான் கரூரில் இருந்து அவரங்குறிச்சிக்கு சென்று தேர்தலில் நின்றபோது பயந்து கொண்டு சென்றேனா என்ன?. ஆனால் இப்போது தோல்வி பயத்தாலும் சாதனைகளை சொல்லி வாக்கு சேகரிக்க முடியாமலும் இந்த மாதரியான கருத்துகளை முன் வைக்கிறார்கள்.

தலைமை என்ன சொல்கிறதோ அதைச் செய்வதுதான் தொண்டனின் கடமை. எந்த இடத்திலும் எனக்கு இது வேண்டும் என்று நான் கேட்கமாட்டேன். என்னை பொறுத்தவரை கரூரும், கோவையும் இரு கண்களைப் போல. கரூரில் இருந்து கோவைக்கான அரசுப் பணிகளை முன்னெடுத்து செய்திருக்கிறோம். இனி கோவையில் இருந்து கரூரை பார்த்துக் கொள்வோம். திமுகவின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது.

உடலில் உயிர் இருந்தால்தான், அந்த உடல் செயல்படும். என்னைப் பொறுத்தவரை கரூரும், கோவையும் உடலும் உயிரும் போல. என்னை இந்த உலகத்துக்கு அடையாளம் காண்பித்தது கரூர் தான். கரூரில் 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம். கரூருக்கும், கோவைக்கும் தேவையானதை முதல்வர் செய்வார்" இவ்வாறு அவர் பேசினார்.

## தஞ்சை அருகே முதல்வர் ஸ்டாலின் சென்ற வாகனத்தில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சோதனை

தஞ்சாவூர், ஏப்.1-

தஞ்சாவூர் அருகே முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்ற வாகனத்தை தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் நிறுத்தி சோதனை செய்தனர்.

தமிழகத்தில் வரும் 23ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இதையொட்டி வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்க மாநிலம் முழுவதும் தீவிர வாகனச் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு அதிகாரிகள் வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்திற்கும் மேல் கொண்டு செல்லப்படும் ரொக்கம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர். பறிமுதல் செய்யப்படும் ரொக்கப் பணம் , பொருட்களுக்கு உரிய ஆவணங்களை காண்பித்த பிறகு அவற்றை விடுவித்து வருகின்றனர் .



இந்த நிலையில் திருவாரூரில் இன்று மாலை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் ஆதரித்துப் பிரச்சாரம் மேற்கொள்கிறார் . இதற்காக முதல்வர் இன்று காலையில் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் தஞ்சாவூர் விமானப்படை தளத்திற்கு வந்தார் . பின்னர் அவர் அங்கிருந்து பிரச்சார வாகனத்தில் சாலை மார்க்கமாக திருவாரூர் நோக்கி புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தார் .

இந்த வாகனத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, டி.ஆர்.பி. ராஜா உள்ளிட்டோரும் உடன் இருந்தனர். தஞ்சாவூர் அருகே சாலியமங்கலம் நாலுரோடு பகுதியில் வாகனம் சென்றபோது அங்கு தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் முதல்வரின் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர்.

வாகனத்தில் இருந்த பைகள் மற்றும் உடைமைகளை திறந்து சோதனையிட்டனர் . இந்தச் சோதனை ஓரிரு நிமிடம் நடைபெற்றது. வாகனத்தின் முன்சீட்டில் அமர்ந்து இருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பறக்கும் படையினருக்கு ஒத்துழைப்பு அளித்தார் .தேர்தல் பறக்கும் படையினரின் சோதனைக்குப் பிறகு திருவாரூர் நோக்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாகனம் சென்றது.

## "திமுக வெற்றி பெற வேண்டும் என்பதுதான் விஜய்யின் கொள்கை" எஸ்.பி.வேலுமணி

கோவை: ஏப்.1-

"திமுக எதிர்ப்பு வாக்குகள் விஜய்க்கு சென்றுவிடக்கூடாது. திமுக வெற்றி பெற வேண்டும் என்பதுதான் விஜய்யின் கொள்கை" என முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்துள்ளார்.




அதிமுக வேட்பாளர்கள் அறிமுக நிகழ்ச்சியில் அவர் பேசும்போது, "திமுக மீது உள்ள எதிர்ப்பு வாக்குகளை நமது பக்கம் திருப்ப வேண்டும். திமுகவின் எதிர்ப்பு ஓட்டுகள் நமக்குத் தான் வர வேண்டும். புதிதாக கட்சி ஆரம்பித்திருக்கும் விஜய்க்கு செல்லக் கூடாது. அவர் 10 நாட்களாக வெளியே வராமல் தற்போது வெளியே வந்துள்ளார். அதை மக்கள் பொருட்டாக நினைக்க மாட்டார்கள். விஜய் திமுகவை கடுமையாக விமர்சனம் செய்து விட்டுச் சென்று விடுவார்.

திமுகவை விமர்சிப்பதால் எதிர்ப்பு ஓட்டுகள் பிரிந்து செல்ல வேண்டும். இதனால் திமுக வெற்றி பெற வேண்டும் என்பதுதான் விஜய்யின் கொள்கை. ஒரு ஓட்டு கூட மற்ற கட்சிகளுக்கு செல்லக்கூடாது. அனைத்து ஓட்டுகளும் அதிமுகவுக்கு வர வேண்டும். அப்போதுதான் நல்ல திட்டங்கள் கிடைக்கும், சட்டம் ஒழுங்கு சீராகும். பெண்களுக்கு பாதுகாப்பு இருக்கும். நீங்கள் அதிமுக கூட்டணிக்குதான் வாக்களிக்க வேண்டும். கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தபோது விஜய் மருத்துவமனைக்கு சென்று பார்த்தாரா?

சொந்தக் கட்சியை காப்பாற்றாதவர் மக்களை எப்படி காப்பாற்றுவார். சினிமா வேறு; நிஜ வாழ்க்கை வேறு. எம்ஜிஆர் அரசியலுக்கு வந்தார் என்றால் அவர் அற்புதமான தலைவர். மக்கள் அவரை நேசித்தனர்; அவரும் மக்களை நேசித்தார். எல்லாரும் எம்ஜிஆர் ஆகிவிட முடியாது" இவ்வாறு அவர் தெரிவித்தார்.



■ 2026தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கபட்டுள்ள ஊடக கண்காணிப்பு அறையின் செயல்பாடுகளை 141 திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் திருமதி. மதுஸ்மிதா சாஹு, இ.ஆ.ப.,அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## ஒற்றுமையில்லாதவர்கள் புதுச்சேரிக்கு நல்லாட்சி தருவது எப்படி? : இண்டியா கூட்டணிக்கு அண்ணாமலை கேள்வி

புதுச்சேரி: ஏப்.1-

30 தொகுதிகளை கூட சரியான இடஒதுக்கீடு செய்து ஒற்றுமையாக செயல்பட முடியாத இண்டியா கூட்டணி, ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு எப்படி நல்லாட்சி வழங்குவர்? என்று அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்திற்காக பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை புதுச்சேரி விமான நிலையம் இன்று வந்தடைந்தார். அவரை கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை, புதுவையில் அமைந்துள்ள இண்டியா கூட்டணியை கடுமையாக விமர்சித்தார். "புதுச்சேரியைப் பொறுத்தவரை உலகத்தில் எங்கும் இல்லாத விசித்திரமான கூட்டணி இது. காங்கிரஸ் கட்சி, கூட்டணி தர்மத்தை மீறி கூட்டணி கட்சிகள் போட்டியிடும் இடங்களிலும் காங்கிரஸ் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.




இதுவே கூட்டணிக்குள் ஒற்றுமை இல்லை என்பதற்கான உதாரணம். அதேபோல், திமுக, விசிக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இணைந்துள்ள இந்த கூட்டணியில் பரஸ்பர மரியாதை என்பதே இல்லை.

30 தொகுதிகளை கூட சரியான இடஒதுக்கீடு செய்து ஒற்றுமையாக செயல்பட முடியாத இவர்கள், ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு எப்படி நல்ல ஆட்சி வழங்குவர் ?. கூட்டணி அமைப்பதில் தோல்வி, வேட்பு மனு தாக்கல் செய்வதில் தோல்வி, என அனைத்திலும் இந்தக் கூட்டணி தோல்வியடைந்துள்ளது. தேர்தல் நாளில் இந்தக் கூட்டணி மிகப் பெரிய தோல்வியை சந்திக்கும், மக்கள் இவர்களுக்கு தக்க பதிலை வழங்குவார்கள்" என்று அண்ணாமலை கூறினார்.



## "மாணவர் முன்னேற்றமே பள்ளியின் இலக்கு!" அழகப்பபுரம் பள்ளியில் கோலாகல ஆண்டு விழா!

தென்காசி ஏப். 1-
தென்காசி மாவட்டம் குத்துக்கல்வலசை ஊராட்சிக்கு உட்பட்ட அழகப்பபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியின் ஆண்டு விழா வட்டாரக் கல்வி அலுவலர் வசந்தி தலைமையில் மிக விமரிசையாக நடைபெற்றது. பள்ளித் தலைமையாசிரியர் ரா. குத்தாலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின் மூத்த ஆசிரியை சே. பாலயோகினி ஆண்டறிக்கையினை வாசித்தார்.

வட்டாரக் கல்வி அலுவலர் வசந்தி, கடந்த கல்வியாண்டில் கல்வியில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களையும், நினைப் பரிசுகளையும் வழங்கினார். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர் அற்புத மேரி பரிசுகளை வழங்கி வாழ்த்திப் பேசினார். விழாவின் முக்கிய அம்சமாக மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வரவேற்பு நடனம், நாட்டுப்புற நடனம், ஆத்திச்சூடி, திருக்குறள் கதைகள், காவடியாட்டம் மற்றும் ஆதிவாசிகள் நடனம் போன்றவை பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன.

இவ்விழாவில் ஊர் தலைவர்கள் தட்சிணாமூர்த்தி, சுரேஷ், சண்முகவேல், சேதுராமலிங்கம் பிள்ளை, மற்றும் பள்ளி மேலாண்மை குழு தலைவர் இசக்கியம்மாள், பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியை சுப்புலட்சுமி, அருகில் உள்ள பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் தென்காசி வட்டாரக் கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.



## "கஞ்சி, காய்கறி போடாதீங்க!" இயற்கை ஆர்வலர்கள் மற்றும் வனத்துறையினர் இணைந்த அதிரடிப் பேரணி

கொடைக்கானல், ஏப்.1-
மலைகளின் இளவரசியான கொடைக்கானலில், மனித வனவிலங்கு மோதல்களைத் தடுக்கும் பொருட்டு வனத்துறை சார்பில் பிரம்மாண்ட விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.*நகர விரிவாக்கம்:* நகர்ப்புறங்களைச் சுற்றி நடைபெற்று வரும் அதிகப்படியான கட்டிட விரிவாக்கப் பணிகளே, வனவிலங்குகள் தங்கள் வாழ்விடங்களை இழந்து நகருக்குள் வருவதற்கு முக்கியக் காரணம் என வனத்துறை சுட்டிக்காட்டியது. *உணவு வழங்கத் தடை:* நகருக்குள் வரும் விலங்குகளுக்கு வீடுகளில் மீதமாகும் கஞ்சி, காய்கறிகளைப் பொதுமக்கள் வழங்குவதால், அவை உணவைத் தேடித் தினமும் நகருக்குள் வரும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்கின்றன. இதைத் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

* ஆபத்தான செயல்பாடுகள்:* குறிப்பாக, சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் மது அருந்திய நிலையில் வனவிலங்குகளுடன் விளையாடுவது அல்லது அவற்றின் அருகே சென்று 'செல்பி' எடுப்பது போன்ற உயிருக்கே ஆபத்தான செயல்களில் ஈடுபட வேண்டாம் என எச்சரிக்கப்பட்டது. பங்கேற்றோர்:

இப்பேரணியில் கொடைக்கானல் வனத்துறையினர், சமூக ஆர்வலர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்கள் திரளாகக் கலந்துகொண்டு விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச் சென்றனர்.



## "அழாதீங்க அண்ணே.. வெற்றி நமதே!" உணர்ச்சிவசப்பட்ட வேட்பாளரைத் தேற்றிய வாடிப்பட்டி அதிமுக நிர்வாகிகள்

வாடிப்பட்டி ஏப். 1-
மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் அதிமுக நகரக் கழகச் செயலாளர் டாக்டர் அசோக்குமார் தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில், சோழவந்தான் தொகுதி அதிமுக வேட்பாளர் மாணிக்கம் உருக்கமான பேச்சு.

"புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழகம் முழுவதும் தாலிக்குத் தங்கம், 50,000 ரூபாய் ரொக்கம், அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட், அம்மா மருந்து பெட்டகம் எனப் பெண்களுக்கான உன்னதமான திட்டங்கள் வழங்கப்பட்டன. சோழவந்தான் தொகுதியிலும் சாலை வசதி, குடிநீர் வசதி எனப் பல்வேறு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தோம்" என்று பட்டியலிட்டார். கடந்த கால சாதனைகளைக் குறிப்பிட்டபோது திடீரென உணர்ச்சிவசப்பட்ட வேட்பாளர் மாணிக்கம், கண்ணீர் விட்டு அழுதார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த நிர்வாகிகள், "அண்ணே அழ வேண்டாம், அம்மாவை நினைத்துக் கொள்ளுங்கள், நிச்சயம் வெற்றி பெறுவோம்" என்று கூறி அவரைத் தேற்றினர்.

இந்நிகழ்வில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் ராஜேஷ்கண்ணா, வேல்முருகன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

## மருத்துவமனை வாரியச் சட்டத் திருத்தங்களை வலியுறுத்தித் திருப்பூரில் மெகா ஆலோசனைக் கூட்டம்




திருப்பூர் ஏப்.1-
திருப்பூரில் இந்திய மருத்துவச் சங்கத்தின் (IMA) 'நியூ திருப்பூர்' புதிய கிளையின் ஆலோசனைக் கூட்டம், பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் அரங்கில் தலைவர் ஸ்ரீசரண் தலைமையில் நடைபெற்றது.*மாநிலத் தலைவர் ஸ்ரீதர் பேட்டி:* சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஐ.எம்.ஏ மாநிலத் தலைவர் ஸ்ரீதர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "இந்திய மருத்துவச் சங்கத்தில் இந்தியா முழுவதும் 10 லட்சம் மருத்துவர்களும், தமிழ்நாட்டில் 184 கிளைகளில் 2 லட்சம் மருத்துவர்களும் உள்ளனர். வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஏராளமான மருத்துவர்களை வேட்பாளர்களாக அறிவித்திருப்பதைச் சங்கம் வரவேற்கிறது" எனத் தெரிவித்தார்.*நிறைவேற்றப்பட்ட முக்கியத் தீர்மானங்கள்:*மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகள் மீதான தாக்குதல்களைத் தடுக்கப் பாதுகாப்புச் சட்டத்தை இன்னும் கடுமையாக்க வேண்டும். மருத்துவமனைகளுக்கான மின் கட்டணத்தை வணிகப் பிரிவிலிருந்து (Commercial) மாற்றி, சிறு மற்றும் குறு தொழில் (MSME) பிரிவின் கீழ் கொண்டு வர வேண்டும். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து மருத்துவர்களுக்கு விலக்கு அளிப்பதுடன், மருத்துவமனை வாரியச் சட்டத்தில் உள்ள சில சிக்கலான சரத்துக்களை நீக்க வேண்டும்.

தொடர்ந்து புதிய நிர்வாகிகளுக்குப் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஏராளமான மருத்துவர்கள் தங்களது குடும்பத்தினருடன் திரளாகக் கலந்துகொண்டனர்.











## "இது தேர்தல் அல்ல.. மக்களின் நேர்த்திக்கடன்!"

## அமைச்சர் ஐ.பி.யின் வெற்றிக்காகக் கோயில்களில் வேண்டுதல் நடத்தும் ஆத்தூர் வாக்காளர்கள்

சின்னாளபட்டி,ஏப்.1-
திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலை முன்னிட்டு, திமுக மாநிலத் துணைப் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் 9வது முறையாகப் போட்டியிடுகிறார். வேட்பாளர் அறிவிப்பு வெளியானதிலிருந்தே தொகுதி முழுவதும் திருவிழாக் கோலம் பூண்டுள்ளது.

*மக்கள் காட்டும் விசுவாசம்:*

தற்போது கிராம ஊராட்சிகள் தோறும் உதயசூரியன் சின்னம் வரையும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஒரு வீட்டில் சின்னம் வரையும்போது, அருகில் உள்ள வீட்டின் உரிமையாளர்களும் தாமாக முன்வந்து, "எங்கள் வீட்டிலும் உதயசூரியன் சின்னத்தை வரையுங்கள், நாங்களும் ஐயா ஐ.பெரியசாமி அவர்களின் விசுவாசிகளே" என்று கூறி சின்னத்தை வரையச் செய்வது திமுகவினரை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இது குறித்து மாவட்ட அயலக அணித் தலைவர் சுரக்காய்பட்டி பிரபு கூறுகையில், "எங்கள் அரசியல் ஆசான் ஐயா கடந்த ஒரு வருடத்திற்கு முன்பே தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கிவிட்டார். ஒவ்வொரு வீட்டிலும் அவரது நலத்திட்டங்கள் ஏதோ ஒரு வகையில் சென்றடைந்துள்ளது. சிறு குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அவர் செய்த நன்மைகளை மறக்க முடியாது. குறிப்பாக பள்ளி மாணவர்களின் நலனுக்காக அவர் செய்த நலத்திட்டங்களை என்றும் மறக்கமுடியாது. மீண்டும் தமிழக சட்டமன்ற வரலாற்றில் ஆத்தூர் தொகுதி மீண்டும் ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைக்கப்போவது உறுதி" எனத் தெரிவித்தார்.



## மஞ்சமலை அய்யனார் அருளுடன் களமிறங்கும் வெங்கடேசன்! சோழவந்தானில் திமுக வேட்பாளர் அதிரடி

அலங்காநல்லூர்.ஏப்.1-
மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள வலையபட்டி கிராமத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ மஞ்சமலை அய்யனார் திருக்கோவிலில், சோழவந்தான் தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடேசன் சுவாமி தரிசனம் செய்தார்.

வேட்பாளர் ஆற்றிய உரை: தரிசனத்திற்குப் பிறகு பேசிய வெங்கடேசன், "நமது முதல்வர் ஸ்டாலின் அவர்கள், தனக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்லாது, வாக்களிக்காதவர்களும் ஏன் இவருக்குப் போடவில்லை என்று வருந்தும் அளவிற்குச் சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். அமைச்சர் மூர்த்தி அவர்களின் வழிகாட்டுதலில் இந்தத் தொகுதியில் சாலைகள், பாலங்கள், யூனியன் அலுவலகம் எனப் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து முடித்துள்ளோம்.

இந்நிகழ்வில் திமுக அவை தலைவர் பாலசுப்பிரமணியன் ஒன்றிய செயலாளர் தனராஜ், பரந்தாமன், முத்தையன், அருண், ஒன்றிய துணைச் செயலாளர் வாவிடமருதூர் கார்த்திகேயன், ஒன்றிய பொருளாளர் சுந்தர், பேரூராட்சி தலைவர்கள் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், சுமதி பாண்டியராஜன், பால்பாண்டி, ஜெயராமன், துணைத் தலைவர் சுவாமிநாதன், நகர செயலாளர் ரகுபதி, மனோகரவேல் பாண்டியன், சத்யபிரகாஷ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் காயத்ரி இதயச்சந்திரன், தனுஷ்கோடி, சேதுசீனிவாசன், மற்றும் பங்களாமூர்த்தி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு, துணை அமைப்பாளர் ஆனந்த், தகவல் தொழில்நுட்ப அணிசதீஷ், மற்றும் நிர்வாகிகள் தியாகு, அற்புதம், வாடிப்பட்டி பிரகாஷ், சிபிஆர் சரவணன், பாரிராஜயோகம், ராஜபிரபு, சுபாஷ் மதுரைவீரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## என்.ஆர்.காங்கிரஸ் பொதுச் செயலாளர் என்எஸ்ஜெ ஜெயபால் வெளியிட்டுள்ள அறிக்கை

புதுச்சேரி, ஏப்.1-
என்.ஆர்.காங்கிரஸ் பொதுச் செயலாளர் என்எஸ்ஜெ ஜெயபால் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது புதுச்சேரி மீனாட்சி பேட்டை சேர்ந்த அழகு என்கிற அழகானந்தம் கதிர்காமம் தொகுதியில், அகில இந்திய என் ஆர் காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளருக்கு எதிராக



சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகிறார். இதனால் அழகு என்கிற அழகானந்தம் அகில இந்திய என் ஆர் காங்கிரஸ் கட்சியில் வசிக்கும் மாநில செயலாளர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுகிறார்.ஆகவே இவருடன் நமது பேரியக்கத்தின் நிர்வாகிகள் ,மற்றும் பொறுப்பாளர்கள் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



## "வெயிலைச் சமாளிக்க பந்தல்.. குடிக்கத் தண்ணீர்!" புதுச்சேரி மாவட்ட தேர்தல் அதிகாரி உத்தரவு

புதுச்சேரி ஏப். 1-
வரும் ஏப்ரல் 9ஆம் தேதி நடைபெறவுள்ள புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்கள் எவ்வித இடையூறுமின்றி வாக்களிக்கத் தேவையான வசதிகளைச் செய்வதில் மாவட்ட நிர்வாகம் தீவிரமாக இறங்கியுள்ளது.

மாவட்ட தேர்தல் அதிகாரி ஏ. குலோத்துங்கன், இ.ஆ.ப. இந்திரா நகர் மற்றும் கதிர்காமம் உள்ளிட்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் தொழிற்பயிற்சி பள்ளி, முத்திரையர்பாளையம் அரசு பள்ளி, செயின்ட் பேட்ரிக் பள்ளி மையங்களைப் பார்வையிட்டார்.

வெயில் காலம் என்பதால் வாக்காளர்கள் வரிசையில் நிற்கும்போது அமருவதற்குப் பந்தல், நாற்காலிகள் மற்றும் தடையின்றி குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்கள் எளிதாக வந்து செல்லச் சாய்வுத்தளங்கள் (ஸிணீனீஜ்), போதிய மின்விசிறிகள் மற்றும் வெளிச்சம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்து, எவ்வித அசம்பாவிதமும் இன்றித் தேர்தல் நடைபெற அறிவுறுத்தினார்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், செம்புக்குடிபட்டி கிராமத்தில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் தபால் மூலம் வாக்குப்பதிவு செலுத்துவது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவின்குமார், கேட்டறிந்தார்.



■ அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் குண்டம் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதலில் தலைமை பூசாரிகள் குண்டம் இறங்க அதை தொடர்ந்து பக்த கோடிகள் அனைவரும் பக்தியுடனும் பரவசத்துடன் இறங்கினர். மேலும் வெளியூரில் இருந்தும் உள்ளூரிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை கோயில் அறநிலைத்துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மிகச் சிறப்பாக செய்திருந்தனர். விழாவில் ஈரோடு மாவட்டம் பத்திரிக்கை நண்பர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.



■ *கிறிஸ்தவ வன்னியர் இளைஞர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மைலாப்பூர் வேளாங்கன்னி அவர்கள் தலைமையில் மாநில நிர்வாகிகள் திராவிட முன்னேற்ற கழகத்தின் மாநில துணைச் பொதுச்செயலாளர் இ.பெரியசாமி அவர்களையும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார் அவர்களையும் நேரில் சந்தித்து சட்டமன்ற தேர்தலுக்கு ஆதரவு தெரிவித்தனர் இந்த நிகழ்வில் முத்தழகு பட்டி சூசை ராபர்ட், தோம்னிக் குட்டத்துபட்டி சீலன் ஜோசப் உடன் இருந்தனர்*

# மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் 3 நாள் மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஏப்.1-

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென்தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று (மார்ச் 31) முதல் 3 நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய உயரதிகாரியும், விஞ்ஞானியுமான வி.ஆர். துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிழக்கு உத்தரப் பிரதேசம் முதல் தென்தமிழகம் வரை விதர்பா, மரத்வாடா மற்றும் உள் கர்நாடகா வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று (மார்ச் 31) இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், தென் தமிழக



கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

ஏப்.1,2 ஆகிய தேதிகளில், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏப்.3, 4 ஆகிய தேதிகளில், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோரத்தில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வெப்பநிலை: தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஏப்.2ம் தேதி வரை பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டி இருக்கக்கூடும். தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஏப்.3,4 ஆகிய தேதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34 முதல் 35 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 முதல் 26 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: தென்கிழக்கு வங்கக்கடலின் சில பகுதிகளில் இன்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீட்டர் வேகத்திலும் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும். எனவே, மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# காரைக்குடியில் தடையை மீறி விற்கப்பட்ட 150 கிலோ இறைச்சி பறிமுதல்

காரைக்குடி, ஏப்.1-

காரைக்குடியில் தடையை மீறி இறைச்சி விற்ற கடைகளுக்கு சுகாதாரத்துறையினர் ரூ.16 ஆயிரம் அபராதம் விதித்து, 150 கிலோ இறைச்சியை பறிமுதல் செய்தனர். மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு இறைச்சி கடைகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் இன்று காலை தடை உத்தரவை இறைச்சி விற்கப்படுவதாக புகார் எழுந்தது.

இதையடுத்து, நகர் நல அலுவலர் வினோத் ராஜ், சுருளி நாதன், ஆய்வாளர்கள்



ஆதிநாராயணன் வெங்கடேஷ் ஆகியோர் காரைக்குடி வாட்டர் டேங்க், பர்மா காலனி, மருதுபாண்டியர் நகர், மகர் நோன்பு திடல் உள்ளிட்ட பகுதிகளில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது, 20க்கும் மேற்பட்ட இறைச்சி கடைகளில் தடை உத்தரவை மீறி இறைச்சி விற்றது தெரியவந்தது. இந்த கடைகளில் இருந்து மொத்தம் 150 கிலோ கோழி இறைச்சியை அதிகாரிகள் பறிமுதல் செய்து, பினாயில் ஊற்றி அழித்தனர். மேலும், இந்த கடைகளுக்கு மொத்தம் ரூ.16 ஆயிரத்து 500 அபராதம் விதித்தனர்

# “மீண்டும் ஒரு வரலாற்று சாதனை படைப்பார் ஐ.பி!” விசிக மாவட்டச் செயலாளர் ஆ.தண்டபாணி தலைமையில் திரண்ட நிர்வாகிகள்

சின்னாளபட்டி.ஏப்.1-

ஆத்தூர் தொகுதி விடுதலை சிறுத்தைகள்கட்சி மாவட்ட செயலாளார் ஆ.தண்டபாணி தலைமையில் நிர்வாகிகள், அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சால்வை அணிவித்து மாபெரும் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தனர்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர்; சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வெற்றி வேட்பாளார் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆத்தூர் தொகுதி மாவட்ட செயலாளர் ஆ.தண்டபாணி தலைமையில் மண்டல துணை செயலாளர் சொ.சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தா.பாண்டி, தொகுதி துணை செயலாளர் மூர்த்தி, சின்னாளபட்டி நகர துணைச்செயலாளர் எஸ்.செந்தில்குமார், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் முன்னாள் செயலாளர் காமராஜ், செய்தி தொடர்பாளர் சிறுத்தை பழனி, மற்றும் ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தை சேர்ந்த ஆத்தூர் கோபால், அம்;பாத்துரை மூர்த்தி. கிழக்கு ஒன்றிய செயலாளர் தா.முத்துமணிகண்டன், ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றிய செயலாளர் காமராஜ், சரவணன் (கிழக்கு), வடக்கு ஒன்றிய செயலாளர் கோபால் நாயக்கர், மற்றும் ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றிய விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், இளைஞரணியினர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு பூங்கொத்து மற்றும் சால்வை அணிவித்து மீண்டும் ஒரு வரலாற்று சாதனை படைக்க வேண்டுமென வாழ்த்து தெரிவித்தனர்.

நிகழ்ச்சியின்போது கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், பிலால்உசேன், மார்க்கிரேட் மேரி, பொருளாளர் சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் நடராஜன், தண்டபாணி, ஆத்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி, ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# “தமிழகத்தில் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் விஜய்யுடன் பேசி என்டிஏ ஆட்சி அமைப்போம்” மத்திய அமைச்சர்

புதுச்சேரி, ஏப்.1-

தேர்தலுக்குப் பிறகு தமிழகத்தில் ஆட்சி அமைக்க பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லையென்றால் தவெக தலைவர் விஜய்யுடன் பேசி தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று இந்திய குடியரசு கட்சியின் தேசிய தலைவரும் மத்திய அமைச்சருமான ராம்தாஸ் அத்வாலே தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய குடியரசு கட்சியின் தேசிய தலைவரும், மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சருமான ராம்தாஸ் அத்வாலே புதுச்சேரிக்கு இன்று வருகை தந்து மாநில நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம்



கூறியதாவது: 5 மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி, அசாமில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி இருக்கிறது. தமிழகத்தில் திமுக ஆட்சிக்கு வராது. அங்கு நடிகர் விஜய்யும் போட்டியிடுகிறார்.

தேர்தலுக்குப் பிறகு அங்கு பெரும்பான்மை பலம் கிடைக்காவிட்டால் நடிகர் விஜய்யுடன் பேசி தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கும். மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜியை வீழ்த்திவிட்டு பாஜக ஆட்சி அமைக்கும்.

கேரளத்தில் இப்போது ஆளும் மார்க்சிஸ்ட் ஆட்சி மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். அங்கும் பாஜக ஆட்சி அமைக்கும். அதனால் தேர்தலுக்குப் பிறகு 5 மாநிலங்களிலும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கும்.

நாகாலாந்து, மணிப்பூரில் அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சியாக எங்களை இந்திய தேர்தல் ஆணையம் அங்கீகாரம் அளித்துள்ளது. மேலும், தேசிய அங்கீகாரம் கிடைக்க கட்சியை வலிமைப்படுத்தி வருகிறோம்.

நாட்டின் வலிமையான பிரதமராக 3வது முறையாக நரேந்திர மோடி பதவியில் இருக்கிறார். நாட்டின் வளர்ச்சிதான் அவரின் குறிக்கோள். இவ்வாறு அவர் தெரிவித்தார். பேட்டியின்போது இந்திய குடியரசுக் கட்சியின் புதுச்சேரி தலைவர் ஞானமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



■ தமிழக சட்டமன்றத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, திருப்பூர் மாவட்டம் பல்லடம் உட்கோட்ட காவல் எல்லைக்குட்பட்ட அண்ணா நகர் பகுதியில் அமைந்துள்ள 'பதற்றமான' வாக்குச்சாவடி மையத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனை திருப்பூர் மாநகர மற்றும் மாவட்ட தேர்தல் மேற்பார்வையாளர் (காவல்துறை) ராகுல் ஹெக்டே, இ.கா.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது பல்லடம் காவல் ஆய்வாளர் உடனிருந்தார்.

# மே.வங்கத்தில் பாஜக வேட்பாளராக வீட்டு வேலை செய்யும் பெண் 2வது முறையாக போட்டி

ஆஷ்கிராம், ஏப்.1-

மேற்கு வங்க மாநிலம் பூர்பா பர்தமான் மாவட்டத்தில் ஆஷ்கிராம் தொகுதியின் பாஜக வேட்பாளராக வீட்டு வேலை செய்யும் பெண் தொடர்ந்து 2வது முறையாக களம் இறங்கியுள்ளார். மேற்கு வங்க மாநிலம் பூர்பா பர்தமான் மாவட்டம் ஆஷ்கிராம் பகுதியைச் சேர்ந்தவர் கலிதா மாஜி. கணவரின் வருமானம் குறைவாக இருப்பதால், இவர் 2 வீடுகளில் வேலை செய்து மாதம் ரூ.4,000 சம்பாதிக்கிறார். கடந்த 10 ஆண்டுகளாக இவர்பாஜகவில் உள்ளார். இவரை கடந்த 2021ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் ஆஷ்கிராம் தொகுதி வேட்பாளராக பாஜக நிறுத்தியது. ஆனால், அவர் வெற்றிபெறவில்லை. இந்நிலையில் தற்போது நடைபெறும் தேர்தலிலும் கலிதா மாஜியை மீண்டும் வேட்பாளராக பாஜக அறிவித்துள்ளது. இதுகுறித்து கலிதா மாஜி கூறும்போது, “தேர்தலில் மீண்டும் போட்டியிட பாஜக வாய்ப்பு அளிக்கும் என நினைக்கவில்லை. பாஜக என்மீது நம்பிக்கை வைத்து மிகப் பெரிய பொறுப்பை வழங்கியுள்ளது. தேர்தல் பிரச்சாரத்தில் கவனம் செலுத்துவேன். எனக்கு வேலை கொடுத்தவர்களும், நான் இந்த முறை வெற்றி பெற வாழ்த்தி அனுப்பியுள்ளனர்” என்றார்.

# ஏப்ரல் மாதத்தில் வெப்ப அலைகள் தமிழ்நாட்டில் ஏற்படலாம்

## இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஏப்.1-

ஏப்ரல் மாதத்தில் வெப்ப அலைகள் தமிழ்நாட்டில் ஏற்படலாம். மழை பெய்தாலும் கூட ஏப்ரலில் வெப்பத்தால் ஏற்படும் அசவுகரியங்கள் தொடரும். மக்கள்



நீண்ட நேரம் வெயிலில் இருப்பதை தவிர்க்க வேண்டும்; போதுமான அளவு தண்ணீர் பருக வேண்டும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது

# “சமுதாயத் தலைவர்களின் ஒருமித்த ஆதரவு வாழ்த்து!” திண்டுக்கல்லில் வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார்க்கு உற்சாக வரவேற்பு

சின்னாளபட்டி,, ஏப்.1-

திண்டுக்கல் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார் அனைத்து சமுதாய தலைவர்களிடம் வாழ்த்து பெற்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். 30 வருடங்களுக்கு பிறகு மீண்டும் திமுக திண்டுக்கல் தொகுதியை கைப்பற்றும் என கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உற்சாகத்துடன் தேர்தல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பாக இம்முறை திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் போட்டியிடுகிறார். திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளராக ஐ.பி.செந்தில்குமார்





அறிவிக்கப்பட்டவுடன், திண்டுக்கல் தொகுதி திமுகவினர் மட்டுமின்றி பொதுமக்களும் உற்சாகம் அடைந்துள்ளனர். திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார் வேட்புமனு தாக்கல் செய்யும் முன்பு திண்டுக்கல் தொகுதியில் உள்ள அனைத்து சமுதாய தலைவர்களிடம் வாழ்த்து பெற்று, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து வருகிறார்.

திண்டுக்கல் மறை மாவட்ட ஆயர் தாமஸ்பால்சாமி அவர்களிடம் வாழ்த்துப் பெற்றதுடன் தொடர்ந்து நன்கொடையாளரும், புரவலருமான ஜி.சுந்தர்ராஜன், எஸ்.கே.சிஸ். குப்புச்சாமி, அங்;குவிலாஸ் செல்லமுத்தையா, தோல் வர்த்தக சங்க நிர்வாகிகள், பிள்ளைமார் சமுதாயத்தை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் இராமையன்பட்டி பங்குதந்தையை சந்தித்து, வாழ்த்து பெற்றதுடன், நகரின் முக்கிய சமுதாய தலைவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களுக்கு சால்வை அணிவித்து வெற்றி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார் வாழ்த்து பெற்றார். அனைவரும் நீங்கள் திண்டுக்கல் தொகுதியில் போட்டியிடுவது மகிழ்ச்சி அளிப்பதாக கூறி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார் வெற்றி பெற வாழ்த்தினார்கள்.

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் மேயர் இளமதிஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, மாநகர பொருளாளர் மீடியா சரவணன், திண்டுக்கல் பகுதி செயலாளார்கள் ராஜந்திரகுமார், பஜ்ருல்ஹக், ஜானகிராமன், சூசைராபர்ட், சந்திரசேகர் மற்றும் மாநகர நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் உட்பட பலர் உடனிருந்தனர்.



# "மூன்றாம் முறையும் முத்திரை பதிப்பார் ராதாகிருஷ்ணன்?" நகரக் கழகச் செயலாளர் ஹக்கீம் பிரச்சாரம்

உடுமலை, ஏப்.1- சட்டமன்றத் தேர்தலில் உடுமலை தொகுதியில் அதிமுக சார்பில் மூன்றாவது முறையாகக் களம் காணும் வெற்றி வேட்பாளர் கே. ராதாகிருஷ்ணன்க்கு ஆதரவாக, 15வது வார்டு பகுதிகளில் தீவிர வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது.

உடுமலை நகரக் கழகச் செயலாளர் ஹக்கீம் முன்னிலையில், மாவட்டக் கலைப் பிரிவு செயலாளர் கே. ருத்ரேஸ்வரன் தலைமையில் இந்தத் தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றது. வேட்பாளர் கே. ராதாகிருஷ்ணன்க்கு ஆதரவாக 'இரட்டை இலை' சின்னத்திற்கு வாக்குக் கேட்டு, கழக நிர்வாகிகள் பட்டாசு வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் உற்சாகமாகச் செயல்பட்டனர்.

இந்நிகழ்வில் அதிமுகவுடன் இணைந்து பாஜக, பாமக, அமமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர். முன்னாள் கவுன்சிலர் பாலு, விஸ்வநாதன், ராஜசேகர், சிவசாமி, வெண்டர் அப்பாதுரை நாகராஜ், நாகூர் மீரான், ராமகிருஷ்ணன், ரவி, பாஸ்கர் மற்றும் பாஜகவின் தங்கவேல், நந்தகோபால் (சைக்கிள் கடை), டிரைவர் கண்ணன், இட்லி மனோகர் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் மற்றும் மகளிர் அணியினர் கலந்துகொண்டனர்.

# ரேஷனில் டபுள் பாய்லிங் அரிசி.. இனி கடையில வாங்க வேண்டாம்!"

## கடையநல்லூரில் இபிஎஸ் வாக்குறுதி



தென்காசி ஏப்.1- 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி, தென்காசி மாவட்டம் கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட அய்யாபுரம் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொண்டார்.

புதிய வாக்குறுதி: பிரச்சாரத்தில் பேசிய இபிஎஸ், "தற்போது ரேஷன் கடைகளில் அரிசியின் தரம் மிகவும் மோசமாக உள்ளது. அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன், நவீன ஆலைகள் மூலம் 'டபுள் பாய்லிங்' செய்யப்பட்ட தரமான அரிசி ரேஷன் கடைகளில் வழங்கப்படும். இதற்காக எத்தனை ஆயிரம் கோடி செலவானாலும் பரவாயில்லை, மக்கள் இனி கடையிலிருந்து அரிசி வாங்க வேண்டிய அவசியம் இருக்காது" என அதிரடி வாக்குறுதியை அளித்தார்.

வேட்பாளர்கள் அறிமுகம்: தென்காசி மாவட்டத்தின் 5 தொகுதிகளையும் அதிமுகவின் கோட்டையாக மாற்ற வேண்டும் என அறிமுகம் செய்தார்: கடையநல்லூர்: கிருஷ்ணமுரளி, தென்காசி: செல்வ மோகன்தாஸ் பாண்டியன், ஆலங்குளம்: கே.ஆர்.பி. பிரபாகரன், சங்கரன்கோவில்: டாக்டர் திலீபன், வாசுதேவநல்லூர்: பாஜக வேட்பாளர் (தாமரை சின்னம்)

"அதிமுக தேர்தல் அறிக்கையை திமுக காப்பியடித்துள்ளது. ஸ்டாலின் அரசு ஒரு 'ஃபெயிலியர் மாடல்' அரசு. கனிமவளக் கொள்ளையைத் தடுக்க இந்த அரசு தவறி விட்டது. வரும் தேர்தலில் 'பை பை ஸ்டாலின்' என மக்கள் சொல்லத் தயாராகிவிட்டனர்" என ஆவேசமாக முழங்கினார்.



# "சிசிடிவி கண்காணிப்பில் புதுச்சேரி எல்லைகள்!" சோதனைச் சாவடி ஆய்வுகளை முடுக்கிவிட்ட மாவட்டத் தேர்தல் அதிகாரி

புதுச்சேரி ஏப்.1- வரும் ஏப்ரல் 9ஆம் தேதி நடைபெறவுள்ள புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் ஆணையம் தனது கண்காணிப்பு வளையத்தை இறுக்கியுள்ளது. இதன் ஒரு பகுதியாக, மாவட்டத் தேர்தல் அதிகாரி ஏ.குலோத்துங்கன், இ.ஆ.ப. தமிழக எல்லையை ஒட்டியுள்ள சோதனைச் சாவடிகளில் அதிரடி ஆய்வு மேற்கொண்டார்.நேற்று திங்கட்கிழமை இரவு மதகடிப்பட்டு மற்றும் திருக்கனூர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகளுக்கு நேரில் சென்ற தேர்தல் அதிகாரி, அங்குள்ள கண்காணிப்புக் கோப்புகளைப் பார்வையிட்டார். சிசிடிவி கேமராக்களின் செயல்பாடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் விரிவாகக் கேட்டறிந்தார்.

# புதுவை மாவட்ட தேர்தல் அலுவலர்அறிவிப்பு

புதுச்சேரி.ஏப்.1- நடைபெற உள்ள 2026புதுச்சேரி சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, 19 அரியாங்குப்பம் மற்றும் 20 மணவெளி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த தேர்தல் பணியில் உள்ள காவல்துறை ஊழியர்கள் தபால் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்க (வாக்காளர் வசதி மையம்) கோரிமேடு காவலர் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள சமுதாயக் கூடத்தில் 01/04/2026 அன்று காலை 7.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கைகளை வேட்பாளர்கள் அல்லது வேட்பாளரின் முகவர்கள் நேரில் பார்வையிடலாம் என புதுவை மாவட்ட தேர்தல் அலுவலர் தெரிவித்துள்ளார்



■ புதுவை மாநிலம் கதிர்காமம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியினை சேர்ந்த மாணவிகள் இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு சுமார் 30க்கும் மேற்பட்ட தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பொம்மைகளை தயாரித்து, அதனை ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான குலோத்துங்கன் காண்பித்தார்கள். மாவட்ட ஆட்சியர் மாணவிகளை பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்கள். இதில் துணை மாவட்ட ஆட்சியர் கண்ணபிரான் மற்றும் மாணவிகளுக்கு உறுதுணையாக இருந்து ஊக்கமளித்த பள்ளியின் நுண்கலை ஆசிரியர் உமாபதி மற்றும் பள்ளி மாணவிகள் உடன் இருந்தனர்.



# தென்காசியில் 100% வாக்கு வலியுறுத்தி ராட்சத பலூனைப் பறக்கவிட்டார் சார் ஆட்சியர்

தென்காசி, ஏப்.1- 2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு, தென்காசி மாவட்ட நிர்வாகம் மற்றும் மகளிர் திட்டம் சார்பில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தும் பிரம்மாண்ட விழிப்புணர்வு நிகழ்வில், தென்காசி சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், சார் ஆட்சியருமான செல்வி வைஷ்ணவி பால், இ.ஆ.ப. அவர்கள் கலந்துகொண்டு, வண்ண பலூன்கள் மற்றும் ராட்சத விழிப்புணர்வு பலூனைப் பறக்கவிட்டுத் தேர்தல் விழிப்புணர்வைத் தொடங்கி வைத்தார்.

சார் ஆட்சியர் உரை: பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி, பொதுமக்கள் அனைவரும் வரும் ஏப்ரல் 23 அன்று தங்கள் வாக்குச்சாவடிக்குச் சென்று தவறாமல் வாக்களிக்க வேண்டும். நீங்கள் வாக்களிப்பதோடு மட்டுமல்லாமல், உங்கள் உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டாரிடமும் வாக்களிப்பதன் அவசியத்தை எடுத்துக்கூறி 100% வாக்குப்பதிவை உறுதி செய்ய வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மகளிர் திட்ட இயக்குநர் எஸ். அபிதா ஹனீப், உதவித் திட்ட அலுவலர்கள் டேவிட் ஜெயசிங், பிரபாகரன், ராஜேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்படப் பலர் திரளாகக் கலந்துகொண்டனர்.



■ பவானி சட்டமன்றத் தொகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர் இரா. மோகனாதேவி தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். உடன் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் முருகேசன், மற்றும் மாநில நிர்வாகக் குழு பொறுப்பாளர்கள் மற்றும் மண்டல செயலாளர ஆகியோர் உடனிருந்தனர். இத்தொகுதியில் முதலாவதாக வேட்புமனுத் தாக்கல் செய்த வேட்பாளர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.



■ திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக களம் இறங்கும் தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு திருநெல்வேலி தெற்கு மாவட்ட தலைவர் ஜெயகோபால் சுவாமி தோப்பு பால பிரஜாபதி அடிகளாரிடம் ஆசி பெற்றபோது... அருகில் நகர தலைவர் முருகன்.

# பிரதமர் வருகை :ட்ரோன்கள் பறக்கத் தடை



பாரத பிரதமரின் புதுச்சேரி வருகையை முன்னிட்டு, 03.04.2026 அன்று ட்ரோன்கள் பறக்கத் தடை செய்யப்பட்ட மண்டலம் என அறிவிக்க காவல் கண்காணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார். பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், ட்ரோன் கேமராக்கள் மற்றும் ஆளில்லா வான்வழி கருவிகள் (Unmanned Aerial Objects) பறக்க விடுவதற்கு தடை விதிக்கப்படுகிறது.
















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000